## வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர்

# மெட்ரோ ரயில் பணிகளை அடுத்த ஆண்டுக்குள் முடிக்க திட்டம்

## ● சுரங்கபாதையில் ரயில் நிலையம் அமைக்கும் பணி தீவிரம்

■ சென்னை

வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையேயான மெட்ரோ ரயில் பணிகளை அடுத்த ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, சுரங்கப் பாதையில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் வேகமாக நடந்து வருவதாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே மெட்ரோ ரயில் வழித்தட முதல்கட்ட நீட்டிப்பு திட்டத்துக்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். மொத்தம் 9 கி.மீ. தூரம் உள்ள இந்த வழித்தடத்தில் 8 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சர் தியாகராயா கல்லூரி, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, டோல்கேட், தாங்கல், கவுரிஆஷ்ரம், திருவொற்றியூர், விம்கோநகர் பகுதியில் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறும்போது, "மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டத்தில் ரூ.3,700 கோடி மதிப்பில் பணிகள் நடந்து வருகின்றன. தற்போது, இந்தத் தடத்தில் சுரங்கம் தோண்டும் பணிகள் நிறைவடைந்து, மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுமக்களின் பாதுகாப்பை முழு கவனத்தில் கொண்டு அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதுபோல், தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் வகையில் சில மாற்றங்களைச் செய்து வருகிறோம்.

எனவே, அடுத்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில் பணிகள் முடிக்கப்பட்டு, மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கிறோம்" என்றனர்.